# வெ.40 லட்சம் குத்தகை விவகாரம் மாநகர மன்ற வாரிய உறுப்பினர் மீது விரைந்து நடவடிக்கை தேவை

கோலாலம்பூர், ஜன. 31-

கோலாலம்பூர் மாநகர மன்றத்தின் ஆலோசனை வாரிய உறுப்பினர் ஒருவர் மீது எழுந்துள்ள புகார் குறித்து கூட்டரசுப் பிரதேச அறநிறுவன நிர்வாக குழுவும் மாநகர மன்றமும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமைச்சர் டாக்டர் ஜலேஹா முஸ்தாபா கூறினார்.

நடைமுறைகளை மீறி சில முடிவுகள் செய்யப்பட்டிருந்தால் அது தொடர்பில் உறுதியான நடவடிக்கை வேண்டும். யாரும் விதிகளை மீறி நடக்க முடியாது. அப்படி நடந்து கொண்டவர்கள் மீது எந்த ஒரு சமரசமும் கொள்ளப்படாது என்றார் அவர்.

நேற்று முன்தினம் பேசிய கோலாலம்பூர் மேயர் மைமுனா அந்த வாரியத்தின் உறுப்பினர் ஒருவருக்கு 40 லட்சம் வெள்ளி திட்டம் ஒன்று பொது குத்தகை கோரப்படாமலேயே வழங்கப்பட்டுள்ளது என்று கூறியிருந்தார்.

கடந்தாண்டு தாம் பதவியில் அமர்ந்த போது இதே உறுப்பினருக்கான 70 லட்சம் வெள்ளி கொண்ட ஒரு குத்தகையை நான் ரத்து செய்தேன் என்றார் அவர்.

சம்பந்தப்பட்ட அந்த வாரிய உறுப்பினருக்கு வழங்கப்பட்ட இந்த 40 லட்சம் வெள்ளி



குத்தகை முறையான விதிகளை அனுசரிக்காமல் தரப்பட்டுள்ளது என்ற புகார் வலைத்தளத்தில் எழுந்துள்ளது.

பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வாரும் அவரது அரசியல் செயலாளர் அஸ்மான் அபிடினும் இந்த திட்டம் பற்றி அறிவர். அந்த வாரிய உறுப்பினர் இதற்கு விண்ணப்பித்துள்ளார் என்பதையும் அவர்கள் அறிவர். ஆனால் அஸ்மான் அதை மறுத்தார். ஏதாவது ஒரு பிரச்சினையில் இப்படி அரசியல் வாதிகளை சகட்டு மேனிக்கு இழுத்து விடுவது சிலரின் தொடர்ச்சியான வழக்கமாகும்.

எனக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. இந்த விவகாரம் தங்கள் பார்வைக்கு வந்தால் அது குறித்து விசாரிக்க தாங்கள் தயாராக இருப்பதாக ஊழல் தடுப்பு ஆணையமும் கூறியிருக்கிறது.